**Deposition of Witness**
**Additional Subordinate Judge, Tenkasi.**
Mcop 45/2023
.ம.சா.1 தனுஸ்ரி

| | |
|---|---|
| Name | : தனுஸ்ரி |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Religion | : |
| Occupation | : |
| Age | : |
| Date | : 20.08.2025 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிருபண வாக்குமுலம் தாக்கல்.

நான் இந்த வழக்கில் 2 ம்மனுதாரர். 1 ம்மனுதாரருக்காகவும் சேர்த்து நான் என்னுடைய நிருபண வாக்குமுலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். 20.12.2022 தேதிய முதல் தகவல் அறிக்கை ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 1. 20.12.2022 தேதிய லேட்.ஆனந்த செல்வியின் பிரேத பரிசோதனை அறிக்கை ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 2. 10.1.2023 தேதிய லேட் ஆனந்தசெல்வியின் வாரிசு சான்று ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 3. 13.02.2022 தேதிய டி.என்.76.ஏ.எல்.6868 என்ற வாகனத்தின் பதிவு சான்று ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 4. மேற்படி வாகனத்தின் காப்பீடு பத்திரம் ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ 5. மனுபடி உத்தரவாக வேண்டுகிறேன்.

2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் பி.எஸ்.சி. ஐ.டி படித்துள்ளேன். வழக்கு தொடர்பான விபரங்களை வழக்கறிஞரிடம் யார் சொன்னது என்றால்

எனது சகோதரி சொன்னார். விபத்தில் ஒரு வாகனம் மட்டும் தான் ஈடுபட்டது என்றால் சரிதான். அந்த வாகனத்தின் உரிமையாளர் எனது தாயார் என்றால் சரிதான். விபத்தின்போது அந்த வாகனத்தை எனது அப்பா தான் ஒட்டி சென்றார். 2ம்எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிரூரையை படித்து பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் படித்து பார்த்தேன். அந்த வாகனத்திற்கு முழு காப்பீடு செய்யப்பட்டுள்ளதால் நஷ்டஈடு கொடுக்க வேண்டும் என தாக்கல் செய்துள்ளோம். 2ம்எதிர்மனுதாரர் எதிரூரையை மறுத்தளிக்கும் பொருட்டு ஆவண சாட்சியம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2ம்எதிர்மனுதாரர் நிறுவன காப்பீடு சான்றிதழை பொறுத்தவரை எனது அம்மா முதல் தரப்பினர் என்றும், என் அம்மா இறந்து விட்ட நிலையில் நாங்கள் முதல் தரப்பினர் என்றும், காப்பீடு நிறுவனம்2ம் தரப்பினர் என்றும், நாங்கள்3ம் தரப்பினராக இல்லாத சூழ்நிலையில் மோட்டார் வாகன சட்ட பிரிவு 166ன்படி தாக்கல் செய்துள்ள இந்த மனு இந்நீதிமன்றத்தில் நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. காப்பீடு சான்று படி வாகன உரிமையாளருக்கு கூடுதல் பிரிமீயமோ, தனி நபர் காப்பீடோ செலுத்த வில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு பிரிமியம் தொகை செலுத்தாத நிலையில் 2ம் எதிர்மனுாதரர் எந்தவித இழப்பீடும் செலுத்த வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. எனது தாயாரின் மாத வருமானம், தொழில் ஆகியவற்றை காட்டக்கூடிய எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கூடுதல் சந்தா செலுத்த வேண்டிய அவசியமில்லை என கூறியுள்ளது ஏற்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

ம.சா.ஆ 3 ன்படி ஆனந்தசெல்வியின் சட்டபடியான வாரிசுகளான நாங்கள் 3 ம் தரப்பினர் இல்லை என்பதால் இம்மனு 2 ம்எதிர்மனுதாரரை பொறுத்து தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை மற்றும் வட்டி அதிகமானது என்றால் சரியல்ல. பிரிவு 166 ன்படி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் 2 ம்எதிர்மனுதாரரை பொறுத்து மனுதள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.